சோ. சு. ஜவஹர், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.

<u>நேர்முகக் கடித எண். 4121/மா.திந. 2/2010 –1 நாள் 6.7. 2010</u>

பொருள்: மாற்றுத் திறனாளிகள் நலன் – அரசு மற்றும் அரசு உதவி பெறுகின்ற கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ–மாணவிகளுக்கு தனிக் கட்டணம் (Special fees) செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்தல் மற்றும் அரசு செயல்படுத்தும் நலத் திட்டங்களின் கீழ் பயன்பெற வருமான உச்ச வரம்பு நீக்கம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது– தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை(நிலை) எண்.30, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள்28.6.2010
2. அரசாணை(நிலை) எண். 31, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள்28.6.2010.

–––––––

பார்வையில் காணும் இரண்டு அரசாணைகளில் (இணைக்கப்பட்டுள்ளன) மாற்றுத் திறனாளிகள் குறிப்பாக மாணவ மாணவிகளின் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களைக் கொண்டு வரக் கூடிய அறிவிப்புகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

1. பல்கலைக் கழகங்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் மருத்துவக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள், வேளாண் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகள் அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பட்டப் படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு ஆகிய உயர் கல்வி பயிலும் அனைத்து மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர்களுக்கும் தனிக் கட்டணம் (Special fees) செலுத்துவதிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

2. மாநில அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாற்றுத் திறனாளிகள் பெற்றிட நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான உச்சவரம்பினை 2010–2011ம் நிதியாண்டிலிருந்து முற்றிலும் நீக்கியும் மேலும், மாநில அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாற்றுத் திறனாளிகள் பெற்றிட மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை மற்றும் குறைபாடுகளுக்கான மருத்துவச் சான்றிதழை கணக்கில் எடுத்துக் கொண்டு நலத் திட்ட உதவிகள் வழங்கலாம்.

2. இந்த அரசாணைகளின் பயன்களை தங்கள் மாவட்டத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகள் முழுமையாகப் பயன் பெறும் வண்ணம், மேற்கண்ட விவரங்களை செய்தித்தாள்கள் உள்ளிட்ட ஊடகங்கள் மூலமாகவும், தாங்கள் கலந்து கொள்ளும் அரசு நிகழ்ச்சிகள் மூலமாகவும்

மக்களுக்கு தெரிவித்து தேவையான விழிப்புணர்வை ஏற்படுத்த தக்க நடவடிக்கைகள் எடுக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இந்த கல்வி ஆண்டில் பள்ளி, கல்லூரிகள் துவங்கும் சூழ்நிலையில் அரசு அளித்துள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழங்கள் சிறப்புக் கட்டணம் (Special fees) விலக்களிக்கப்பட்டுள்ளதை உடனடியாக அமல்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. இந்த அரசாணை பற்றிய விழிப்புணர்வும், அதன் வழியே மாற்றுத் திறனாளிகள் பயன்பெறுவதும் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் வழிகாட்டுதலிலும், சிறப்பான செயல்பாட்டிலும் அடங்கியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி, இது குறித்து தாங்கள் எடுத்த நடவடிக்கை விவரத்தினை விரைவில் அனுப்பிவைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள

பெறுநர்
திரு.
மாவட்ட ஆட்சித் தலைவர்
மாவட்டம்.

இணைப்பு:-பார்வையில் கண்ட இரண்டு அரசாணைகள்

நகல்:–

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6 தக்க மேல் நடவடிக்கைக்காக.

அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் ( மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)